بسم الله الرحمن الرحيم



# FRIDAY SERMON

**11 JANUARY 2019**

**(04 JAMAD'UL AWWAL 1440 AH)**

**HADHRAT MUHYI-UD-DIN AL-KHALIFATULLAH**
**MUNIR AHMAD AZIM**

## POVERTY, SILENCE AND FAITH

### வறுமை, அமைதி மற்றும் நம்பிக்கை

**TAMIL VERSION** / தமிழ் பதிப்பு

சலாமிற்கு பிறகு தஷஹ்ஹுதும், தஅவசும், அல்.ஃபாத்திஹாவும் ஓதிக்கொண்டு ஹஸ்ரத் கலீ.ஃபத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை) அவர்கள் தம் ஜுமா பேருரையினை ஆரம்பித்தார்.

அல்லாஹ்வின் பார்வையில் மிக உயர்ந்த நிலையினை அடைந்தவர்கள் உள்ளனர். அவர்கள் மிக மிக முக்கியமான நபர்கள் ஆவார்கள். அல்லாஹ்வை அவர்கள் நேசிக்கின்றனர். அல்லாஹ்வும் அவர்களை நேசிக்கின்றான். அவர்கள் மக்களால் ஒடுக்கப்பட்டவர்கள், பிறரின் மேலாதிக்கத்தின் கீழ் அவர்கள் நொறுக்கப்பட்டவர்கள். நாம் எந்நேரமும் இத்தகைய மக்களுடன் மிக நல்லமுறையில் நடந்துக்கொள்ள வேண்டும். தனது பிரதிநிதியாகவும், எமன் நாட்டிற்கு ஆளுனராகவும் நியமிக்கப்பட்ட முஆத் இப்னு ஜபல் (ரலி)

அவர்களுக்கு அண்ணல் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் அளித்த அறிவுரை இவ்வறாகும். "முஆத் (ரலி) அவர்களின் குதிரையின் கடிவாளத்தை பிடித்தவாறு ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் கீழ்வருமாறு அறிவுரைத்தார். **"ஒடுக்கப்பட்டவர்களின் சாபத்தைக் குறித்து எச்சரிக்கையாக இருக்கவேண்டும். ஒடுக்கப்பட்டவர்களின் பிரார்த்தனைக்கும் அல்லாஹ்வுக்கும் இடையே ஒரு முகத்திரை இல்லை" (புகாரி முஸ்லீம்)**

அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். **"ஒடுக்கப்பட்டவரின் வேண்டுகோளுக்கு அவன் பதிலளிக்கின்றான். அவர் தீயவராக இருந்தால் கூட! அவரது தீய செயல்களானது அவருக்கு எதிராக மட்டுமே இருக்கிறது." (அஹமது)**

இப்னு ஹிப்பான் (ரலி) அவர்கள் ரிப்போர்ட் செய்திருக்கின்றார். திருதூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

**"நியாயத் தீர்ப்பு நாளில் அல்லாஹ் ஏழைகளை அழைப்பான், அவர்களிடம் எந்த கணக்கும் கேட்க்காமல், அவர்களை முதலில் சொர்க்கத்தில் நுழைய வைப்பான். ஆனால், செல்வந்தர்கள் மற்றும் தலைவர்களை பொறுத்தவரையில், அவர்கள் காத்திருக்க வேண்டும். பின்னர் அவர்களிடம் அவன் கணக்கு கேட்பான்."** அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். **"செல்வந்தர்கள் சொர்க்கத்தில் நுழைவதற்கு ஐந்தாயிரம் வருடங்களுக்கு முன்னால் ஏழைகள் சொர்க்கத்தில் நுழைவார்கள்." (தீர்மிதி)**

திருதூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

**"ஏழைகள் மற்றும் பலவீனர்கள் மத்தியில் நீங்கள் என்னைத் தேடுங்கள். உண்மையில் உங்கள் மத்தியிலுள்ள ஏழைகளுக்கும் பலவீனர்களுக்கும் வழங்கி கொள்வதன் மூலம்தான் நீங்கள் வெற்றி பெறுவீர்கள்" (அபுதாவூத்).**

தங்களை தற்காத்துக்கொள்ள முடியாதவர்களை அல்லாஹ் பாதுகாக்கின்றான். தற்காப்பு என்பது அனுமதிக்கப்பட்ட ஒன்றாகும். ஆனால் இஸ்லாமிய பெருந்தன்மையானது, விவாதங்கள் மற்றும் வீணான பேச்சு வார்த்தைகளிலிருந்து விலகி நிற்கவும், அமைதியை கடைப்பிடிக்கவும் நமக்கு கற்பிக்கிறது.

தௌர் (Thaur) குகையில் வைத்து சிலந்தி வலைகளையும், புறா முட்டைகளையும் கொண்டு அல்லாஹ் தனது தூதர் முஹம்மது (ஸல்)

அவர்களை பாதுகாத்தான். மூஸா நபி (அலை) அவர்களின் மக்களுக்கு அல்லாஹ் பொறுமையை அளித்தான்.

அல்லாஹ் திருமறையில் கூறுகிறான். **“பலவீனர்கள் எனக்கருதப்பட்ட சமுதாயத்தினிரை நாம் வாரிசாக்கினோம். மேலும் இஸ்ரயேலீன் மக்கள் பொறுமையை மேற்கொண்டதனால் உமது இறைவன் அவர்களுக்குகளித்த சிறந்த வாக்குறுதி நிறைவேறிற்று.”** (7:138)

நீங்கள் தெரிந்துக்கொள்ள வேண்டும், திரு நபி (ஸல்) வுக்கும், இஸ்லாமிற்கும் முந்தைய காலகட்டத்தில் அப்றஹா மற்றும் அவனது யானை படைகளிலிருந்து பாதுகாப்பை பெற மெக்காவை சார்ந்த மக்கள், மெக்காவிலிருந்து இடம் பெயர்ந்தனர். அச்சூழலில் பரிசுத்த காபாவை அக்கொடுகோலனிலிருந்து அல்லாஹ் பாதுகாத்தான். அதாவது பறவைகள் மற்றும் கூழாங்கற்களை பயன்படுத்தி அப்றஹாவிலிருந்து காபாவை அல்லாஹ் பாதுகாத்தான்.

நிச்சயமாக அல்லாஹ்வுக்கு எதிராக செயல்படுவோர்கள் அதாவது அல்லாஹ்வின் கோபத்திற்கு ஆளாகின்றோர்கள் சுயமாகவே அழிந்துவிடுவார்கள். முடிவில்லாத தண்டனைக்கு அவர்கள் ஆளாகிவிடுவார்கள்.

ஒருவர் தன்னைத்தானே தற்காத்துக்கொள்வதில்லை. மாறாக அல்லாஹ்வின் மீதான பயம் காரணமாக அவர் தற்காப்பை அடைகிறார். இது ஆன்மாவின் பெருந்தன்மை ஆகிறது. ஒருவர் வரம்பு மீறி செயல்பட அஞ்சுகின்றார். அது அல்லாஹ்வை மகிழவைப்பதற்கல்ல. அதாவது தனக்கு நல்லது நிகழவேண்டும் என்ற எண்ணத்துடன் ஒருவர் அஞ்சுகின்றார். அது அவருக்கு ஒரு தற்காப்பாக அமைகிறது. ஹஸ்ரத் ஆதாம் (அலை) அவர்களின் புதல்வனாகிய காபீலின் (Habeel - காபீல்) கதையிலிருந்து அதை மிக தெளிவாக புரிந்து கொள்ளலாம். காபீலுக்கும் குற்றவாளியான அவரது சகோதரன் ஹாபீலுக்கும் (Qabeel - ஆபேல்) இடையே உள்ள பேச்சு வார்த்தைகளை அல்லாஹ் இவ்வாறு விவரிக்கின்றான்.

**“நீ என்னைக் கொல்வதற்கு உன் கையை எனக்கு எதிராக நீட்டினால் கூட நான் உன்னைக் கொல்வதற்கு என் கையை உனக்கு எதிராக நீட்ட மாட்டேன். நிச்சயமாக நான் எல்லா உலகங்களுக்கும் இறைவனாகிய அல்லாஹவுக்கே அஞ்சுகிறேன்”** (5:29)

அநியாயம் மற்றும் பொறாமை நிறைந்த அவருடைய சகோதரனுக்கு, காபீல் எவ்வளவு இனிமையான பதில் அளிக்கிறார். அவர்கள் இருவரும் அல்லாஹ்வுக்கு காணிக்கையை வழங்க விரும்பினர். ஆனால் அவ்விருவருடைய அர்ப்பண முறையில் பெரிய வித்தியாசம் இருந்தது.

ஒருவர் மனமார்ந்த நிலையிலும், நேர்மையாகவும் அல்லாஹ்வுக்கு அஞ்சியவாறு செயல்பட்டார். மற்றவர் தற்பெருமையுடனும், பொறாமையுடனும் தாம் மட்டும் வெற்றி பெற வேண்டும் என்ற எண்ணத்துடனும் செயல்பட்டார். வெற்றியடைய அவர் எதையும் செய்ய தயாராக இருந்தார். அதற்காக சொந்த சகோதரனைக் கூட கொலைச் செய்ய அவர் தயாராகிவிட்டார். அவரது அந்த பகைமைக்கு அல்லாஹ் சாட்சியாக இருந்தான். அல்லாஹ் காபீலின் தியாகத்தையும் நேர்மையையும் ஏற்றுக்கொண்டான். அது ஒரு முழுமையான தியாகமாக இருந்தது. ஏனெனில் அவர் அல்லாஹுவின் வழியில் முதல்முதலான ஷஹீத் (Martyr) ஆவார். முடிவில் ஒரு ஹதீஸ் இதற்கு ஆதாரமாக கொடுக்கப்பட்டுள்ளது. இமாம் அஹ்மது (ரலி) அவர்கள் எழுதிய முஸ்னத் அஹ்மதில் நமக்கு அதனை காணலாம்.

அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னிலையில் வைத்து ஒருவர் அபூபக்கர் (ரலி) அவர்களை அவமதித்து பேசிக்கொண்டிருந்தார். அதைக் கேட்டு ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் அமைதியாகயிருந்த போது அதை பாராட்டியவாறு திரு நபி அவர்கள் சிரித்துக் கொண்டிருந்தார். ஆனால் அபூபக்கர் (ரலி) அவர்கள் பொறுமையை இழந்து, புண்படுத்தும் வார்த்தைகளால் பதிலளிக்க ஆரம்பித்த போது திரு நபி (ஸல்) அவர்கள் கோபமடைந்தவாறு அந்த இடத்தை விட்டு நகர்ந்தார். பிறகு அபூபக்கர் (ரலி) அவர்கள் அதை குறித்து ஒரு விளக்கம் திரு நபி (ஸல்) விடம் கேட்டார் அந்நேரம் திரு நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு விளக்கமளித்தார். **“நீங்கள் அமைதியாக இருந்தபோது உங்களுக்கு ஆதரவாக பதிலளிப்பதற்கு அல்லாஹ் ஒரு மலக்கை அனுப்பி வைத்தான். ஆனால் நீங்கள் பதிலளிக்க ஆரம்பித்த போது அங்கு சாத்தான் வந்துவிட்டான். சாத்தானுடன் உட்கார்ந்து கொள்ள எனக்கு விருப்பம்மில்லாததால் அவ்விடத்திலிருந்து நான் வெளியேறினேன்.”**

பாருங்கள்! அமைதி என்பது எவ்வளவு உயரிய ஒன்றாகும். அமைதியினால் பல நன்மைகள் உள்ளன. இக்காரணத்தாலோ அல்லது

மற்றொரு காரணத்தாலோ, அபூபக்கர் (ரலி) அவர்கள் தனது வாயில் ஒரு சிறு கல்லை போட்டு வைக்கும் பழக்கத்தை உருவாக்கிகொண்டார், பிறகு வருத்தப்படும் காரியங்கள் எதுவும் கூறாமல் இருப்பதற்காக!

அல்லாஹ் எந்நேரமும் நம்மை அவனது அன்பானவர்களாக எண்ணட்டும். நமது நாவினை பாதுகாப்பதற்கு அவன் நமக்கு துணைப்புரியட்டும். நாம் நெறியான பாதையில் இருந்தால் கூட, நமது எதிராளிகளுக்கு எதிராக நாம் அல்லாஹ்வின் உதவியினை தேடுகிறோம். அதாவது பகைவர்களின் சூழ்ச்சிகளுக்கும், ஏளனங்களுக்கும் எதிராக நாம் அல்லாஹ்வின் உதவியினை நாடுகிறோம். இன்ஷா அல்லாஹ்! ஆமீன்.

**Translated by:**
*Naib Amir - Azim Ahmad*
*7339689239*

## ISSUED BY

**R. JAMALUDDIN RAOTHER SAHIB**
Amir Kerala South Zone, India
Kerala contact
No: 9447001832

**SIRAJ DEEN SAHIB**
Amir Tamilnadu state, India
Tamilnadu Contact
No: 7502272774

**PUBLISHED BY:**
**JAMAAT-UL-SAHIH-AL-ISLAM**
**KALIAKKAVILAI BRANCH**
**(TAMILNADU AND KERALA BORDER)**
**Ph No: 9789180817, 9171977109**